பத்மினி சுபா

T.D.R.C 3318
RRN. 217-II-1856

DIGITIZED

O-,892MAP3,P
M86
117824

உ

முருகன்றுணை.

பெங்களூர்

## விநோத சபை.

# பத்மினி சபா.

இஃது

திரிசிரபுரம்

சைவ சமய குரு பரம்பரை

கும்பகோணம்

சரவணமூர்த்தி சுவாமிகளின் மாணாக்கராகிய

திருமலைவாயல்

அப்பாவுபிள்ளை என்னும்

இயற்பெயருடைய

**முத்துசாமிபிள்ளை யவர்களா**

லியற்றியது.

---

இஃது

அத்திப்பேடு ம-ா-ா-ஸ்ரீ.

தாயுமானமுதலியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

ரிப்பன் அச்சுயந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

*All rights Reserved.*

1886.

விலை அணா 3.

2-17 / 2-1886
3318

M96

TO

HIS HIGHNESS SRI

**CHAMA RAJENDRA WUDAYAR**

**BAHADUR**

THE MAHARAJAH OF MYSORE.

---

THIS

LITTLE VOLUME IS

MOST RESPECTFULLY DEDICATED

BY OBEDIENT AND HUMBLE SERVANT

THE AUTHOR.

உ

முருகன்துணை.

# பத்மினிசபா.

விசித்திரசேனன் விருத்தம்.

ஆழியைக்கரைகளின்றி அமைத்திட்ட அருமை நாட்டில்
மேழியின்செல்வமோங்க மெய்யருள் புரியுமாதா
ஊழியின்வினைகடன்னை உத்தமா கொய்துமென்னை
நாழிகைவிடாமற்காரும் நாதனேகைலைவாழ்வே.

மந்திரி உத்தமகுணன் விருத்தம்

நன்னெறியதனில்செங்கை நாட்டியே அரசின்மேன்மை
தன்னிலைபெறாதிருந்தத் தரணியையாளும் தீரா
உன்னதநடையொழுக்கம் உயர்குணம் புகழும் கீர்த்தி
மன்னவாபூண்டஎந்தன் மதிபனே உன்றாள்போற்றி.

ம-வ.—போற்றி போற்றி இந்த வீராணநகரையாளாநின்ற விசித்திரசேன மகாராஜனே போற்றி.

அ-வ.—அப்பாமந்திரி நாட்டின்வளப்பம் எதாகிலும் இருக்கில் எனக்கெடுத்தோதுவாய் பாலா. ம-வ.—அரசே தங்களுடைய நீதி நெறி பொறுமை புகழ் சத்தியத்தினால் மாதம் மும்மாரிபெய்து குடிகளிடும் பலவித* வேளாண்மைகளோங்கி தேவாலய பிரமாலய பூஜைகள் குறைவின்றி நடந்தும் ஓம எக்யாதிகளும் தான தருமங்களும் தழைத்து இறப்பவர்க்கு இல்லையென்னாத எண்ணமுடையவர்களாய் இருக்கின்றார்கள் வேந்தே. அ-வ.—அப்படியா சந்தோஷம் ஆனால் நான் இராத்திரி உறங்கும்போது ஒரு கனாக்கண்டேன் அதன் பலாபலன் எதுவோ என்மனம் கொஞ்சம் கிலேசத்தை அ

டைந்திருக்கின்றது நேசா. ம-வ.—அக்களவு இவ்விதமானதென
அடியேனுக்கு வெளியிடில் தாங்கள்கொண்ட வியாகூலத்தை நீக்க
த்தக்கமுயற்சிசெய்வேன்தன்னையே. அ-வ.—ஆனால் கேளாயப்பா.

அரசன் விருத்தம்.

உரியஎந்தன் மாளிகையில் வனங்கள்தன்னில்
உள்ளபல மிருகம்வந்து உலாவக்கண்டேன்
கரமதனில் வில்லேந்தி விரட்டும்காலை
கலையங்கு தோன்றியென்னைக் கவரக்கண்டேன்
பரபரப்பா யிங்கனை விட்டும்பால்
பாலகனே வேதிடம்நான் பற்றக்கண்டேன்
சிரமதனில் கரம்வைத்து விதியையெண்ணிச்
சிறையிருக்கக்கண்டதென்ன செப்புவாயே.

அ-வ.—அப்பா மந்திரி என் அரண்மனைக்குள் வனமிருகங்கள்
வந்து உலாவக்கண்டு வாளும் சரமேந்தி துரத்துங்கால் ஒரு மான்
கையில் சிக்கக்கண்டேன் அப்பால் என்னாட்டைவிட்டு மறுதேசம்
சேரக்கண்டேன் அதின்பின் என்னைஒருவன்பிடித்து சிறை அடை
க்கவும் கண்டேன் இது எதுவரமோ வெளியிட்டு என் மனோதுக்க
த்தைத் துறத்துவாய் தோழனே. ம-வ.—சுவாமி புவியினில் வரு
முன் எழுதியவிதிவந்தபின் எந்தமுயற்சிசெய்தாலும் குறையுமா அல்
லது மறையுமா அழியுமா இன்பித் தொலையுமா வேந்தே வரும்விதி வழி
நிற்குமா மகாசன்மார்க்கநெறி பூண்டிருந்த அரிச்சந்திரன், நளன்,
புரூரவன் முதலாகிய பல சக்ரவர்த்திகளும் அநுபவித்த துன்பங்
களை நாம் கதையில் வாசிக்கும்போதே மனம் வருந்தி வாடுகின்றோ
மல்லவா அநுபவித்தமானவர்கள் என்னதுயரம்கொண் டிருப்பார்கள்
எதுக்கும் ஈசனே துணை யென்றிருக்கவேண்டும் கனவின்பலனோ எ
ன்னவென்றால் குடிகளிட்டபயிரை மிருகங்களழிக்க நீர் வேட்டையா
டச்செல்ல ஒரு கன்னிகையால் காமத்திலாழ்ந்து அதனால் கடுஞ்சி
றைக்குள்ளாகி பின் மேன்மையடைவீர் வேந்தே. அ-வ.—நாம்
எங்கும்போகாதிருக்கிலோ ம-வ.—விதிவிடாது மதியைத் தன்வழி
யே இழுத்துச்செல்லும் மகாதுபாவா. அ-வ.—அப்படியா பார்ப்



போம். குடிகள்வசனம்.—ஓ அண்ணா இதேதோ இன்று நமக்கு இக்
காலகெதி நேரிட்டதே அரசன் என்ன அக்கிரம நிலைக்குள் ஆனா
னோ தெரியேன் காட்டிலிருக்கும் மிருகங்கள் நாட்டில்வந்து நாமி
ட்ட பயிரையெல்லாம் அழிக்கின்றதே சீக்கிரம்சென்று வேந்தனை
யும், வேடர்களையும் அழைத்தோடிவாருங்கள் வாருங்கள். கு-வ.
அப்பா கட்டியனே அரசனெங்கே. க-வ.—ஏனப்பாகுடிகளே என்
னகாரியம் சொல்லுவீர்கள் நான் அரசனுக்கு அறிவிக்கின்றேன்.

கு-வ.—அடே போங்காணும். க-வ.—நீங்களிப்படி அரசன்
வரச்சொல்லாமல் போகப்போகாது. கு-வ.—சீ நில்லுங்காணும் எரு
துநோய் காக்காயதியுமா ஆண்டவா பயிர்களெல்லாம் போச்சுபோ
ச்சே ஆனை காடியெல்லாம் வந்து அழிக்கின்றதே இழவுவரி எப்
படி கட்டுவோம் நாங்கள் பிழைப்பது மெப்படி சீக்கிரம் ஓடிவந்து
விரட்டும் அரசே. அ-வ.—ஆ அப்படியா இதோவந்தேன் மந்திரி
வேடர்களை வரச்சொல்வாய் நானும் உடுத்திக் கொள்கின்றேன்.
வே-வ.—போற்றி ! ஆண்டவா, அ-வ.—அடா வேடர்களே
இன்று என்னுடன் வேட்டைக்கு வருகிறீர்களா. வே-வ.—இப்பே
ற்கொற்றவேலை என்றைக்குவருமோவென்று ஆண்டவனை பிரார்த்தி
த்துக்கொண் டிருந்தோம் வேந்தே.

---

அரசன் வேட்டை ஜாவளி

இ-ம்-கடா-மிசர-ஏசதாளம்.

வனவேட்டையும் நான் — ஆடுவேன்பார்
கனமுடன் நீங்களும் — கவனமாய்நடந்திடும். (வன)

காடியைவெட்டி — கடம்பையைக்குத்தி,
பறவையை ஓட்டி — பன்றியை எற்றி. (வன)

புலிகளைமிதோ — போக்கிேனன் ஆவி
கலைகளைவலையால் — கட்டுவாய் தாவி. (வன)

அ-வ.—அப்பா நான் வேட்டை யாடி அலுத்தமையால் கொ
ஞ்சம் இந்த வனத்துட்சென்று உல்லாசமாய் உலாவி வருகின்றேன்

நீங்களிங்கு இருப்பீர்களப்பா. ம-வ.—அப்படியே போய் வருவீர் நாங்களிங் கிருக்கின்றோம்வேந்தே. அ-வ.—அப்பா ஆஸ்ரேயனே நீ என்னுடன் வருகின்றையா இங்கு இவர்களுடனிருக்கின்றையா. அ-வ.—நான் உமமைவிட்டு இருப்பதுமுண்டோ. நீர் என்னை அழைக்காவிடினும்விருந்திடாமல் வினைவந்து சூழ்வதுபோலவந்துசேரேன். நீர்போம் நான்வரமாட்டேன். அ-வ.—அப்பா ஆஸ்ரேயா கோபம் செய்யாதே. என்கூடவருவாய் ஆ-வ.—மாட்டேன் மாட்டேன். இப்போதுனக்குஎன்றால் ஆகவேண்டியதென்ன உன்னை பிள்ளையாரைப்போ லிருக்கச்செய்துநான் முன்னின்று வேட்டையாடி வதைக்க பின்னீயும் மீசையை முறுக்கலானாய். நான்வராவிட்டால் அன்றோ உன் வேட்டைவெட்டவெளிபட்டம்பகலாயிருக்கும் போ. போ. அ-வ.—ஆனல் இங்கு நீ பத்திரமாயிரு நான் போய் வருகின்றேன். அ-வ.—ஆ இந்தவனமிருக்கும் பெருமையைப் பார்த்தாயா. இந்த விநோதங்களை நாம் எந்தகாலத்திலும் கண்டறியோம். ஆ இதென்ன கெதி நம்மை இங்கொருநாகம் துரத்திக்கொண்டு வருகின்றதே நிராயுதபாணியாய்வந்தோம். ஆ-வ.—ராஜன் நம்மைவிட்டுப் போனன் அங்கு ஏதாகிலும்துன்பம் நேரிட்டால் துணையார் நாம் போவோம் ஆயுதங்களும் கொஞ்சம் எடுத்தேகுவோம். அதோ அரசன் என்னமோ திகிலடைந்திருக்கின்றான் நாம் அவனுக்கு தெரியாமல்பின்னிருந்துபார்ப்போம் அ-வ.—ஆ நாகமே என் உனக்கு என் மீது இத்தனைகோபம் நான் திக்கில்லாப்பரதேசி ஆயுதமில்லா அனாதி பொறுத்து ஆட்கொள்வாய். ஐயையோ என்னகோபமாய் சீறுகின்றதே சிவனே கதி.

---

அரசன் ஜாவளி

இ-ம். முகாரி சாப்பு.

சங்கரா கங்காதரா நமசிவாயா சம்போ சதாசிவனே (சங்)

பொங்கரவணிந்தவா பொருமிச்சீறுதே நாகம்
பொறிபுலன்கலங்குதே போற்றிசெய்தேன்பாதம். (சங்)

திங்களணிந்தவா திருநீறணிநாதா
திகைக்குமெனைக்காக்க தேடிவாபொற்பாதா. (சங்)

அரகராசிவசிவா ஆயுதமில்லானென்றே
அருகிலோடிவருதே அபயமுனக்கின்றே. (சங்)



அ-வ.—ஆஸ்ரேயன் கூடவாராமற்போனனே. ஆ-வ.—இராஜனே அழவேண்டாம் அஞ்சவேண்டாம் இதோ இங்கிருக்கின்றேன். இதோ வில் ஒரு... கொண்டு அந்த வந்த நீகொல்கின்றையா நான் கொல்கின்றதா. அ-வ.—நீ இரு அப்பா நான்வதைக்கின்றேன் இன்னும் முன்னுக்குச் செல்வோம். ஆ-வ. எனக்கு பசி அனாதுரான்தாபிறு வாகின்றதே நான்வரமாட்டேன் நீபார்த்து வா காரியமிருந்தால் ...னை நினை நான் வந்துவிடுகிறேன். [illegible]-வ.—நல்லதப்பா நேசா.

பத்மாவதி வசனம்

அடியம்மா தோழி யுத்திவாமினி நாம்சென்று நமது சிங்காரவனத்தில் உலாவிக்கொண்டு கொஞ்சம்போது திவ்விய புஷ்பங்களை அறுத்தாக்கொண்டு வருவோம் இங்கிருந்தால் என்மனம் எப்படியோ யிருக்கின்றது. தோ-வ.—நல்லது அம்மணி அப்படியே செய்வோம். அம்மா. இதோ சிங்காரவனம் வந்தோம். ப-வ.—ஆமடி ஆம் இங்கு வீசும் குளிர்ந்தவாடை என் மனதை மயக்குகின்றது. இங்கிருந்தபடி நான் ஒரு பதம்பாடுவேனடி தோழி. தோ-வ.—நல்லதம்மா.

---

பத்மாவதி ஜாவளி.

செஞ்சுருட்டி ரூபகம்.

மோகம்மீறுதே நான்செய்வேன் மொழியடிபெண்ணே
மோகவாடைதானென்மன முருகுதேகண்ணே (மோ)

மல்லிமுல்லைவாசமிதோ மயக்கமாக்குதே
மனதையொருவாறுமிதோ மானேதேக்குதே (மோ)

கிள்ளைமொழியைக்கேட்டசெவிகினிவாய்க்காட்டுதே
இளரோஜாதசோம்பலிதோ கேளாய்வாட்டுதே (மோ)

ஐயோஇதற்கென்னசெய்வேன் அறைகுவாய்பாங்கி
அவிசிறநாதேஎன்மனம் அலையுதேஏங்கி (மோ)

தோ-வ. அம்மணி ஏது இன்று தன்னை மறந்து பாடுகின்றீர் நாம் சந்தோ யிருக்கச்செய்வோம் தாயே. ப-வ.—என்னடி பாங்கி

தோ-வ. நீ இப்படிப்பாடுவதை நான் என்றும் கேட்டதில்லை உன்பாட்டைக்கேட்டு இங்கிருக்கும் பறவைகளும் ... மாய்விட்டது. இனி நீபாடப்போகாது வழிப்போக்கர்கள் உ... யைக்கேட்டு வ ரில் துன்பத்திற்கிடமாகும்தேவியே. ப-வ.—மாதே இந்தவேளையில் இங்கு எவர் வரப்போகின்றார்கள். இன்னம் கொஞ்... டி என்மனதை நானே ... ல்லாசப்படுத்திக்கொள்ளுகின்றேன் ... செய்யாதே உனக்... வந்தனம் தோழி. அ-வ.—... தக் காட்டில் இவ்வளவு ... ரியாய் பாடினது ஆராயிருக்கும் நாட... சென்று அறிந்து வருவோம். ஆ-வ.—வேந்தனுக்கு வெறி பிடித்ததா அங்கு பாடுபவள் சந்திரபுத்திரன் மகளாகிய பத்மாவதி யென்று உணராமல் போகின்றான் அவனோ மகாபுத்திசாலி, விவேகி, தந்திரவாதி, இவனோ மூடன் காமங்கு செல்லாவிடில் என்னகேடு வருமோ நாமும் பின்சென்று அங்குநடப்பதை மறைந்திருந்து கண்டுவருவோம். தோ-வ.—அம்மா உன் இஷ்டத்தின்படி பாடு. ஆனால் குரலை அடக்கிப்பாடுவாய். ப-வ.—நல்லதடி தோழி.

---

பத்மாவதி-ஜாவளி.

பரஸ்-ஏக-தாளம்.

ஆசையிலேசொக்கி அலையரேனடாசாமி
அணைந்திட மதனையே அறியேன் அறியேன்இதோ (ஆசை)

இக்கில்லாப்பாவிபோல் தேவனும்படைத்த
தென்னமோகாரணம் தெரிகிலேனே
சிக்கினேன்மன்மதன் செய்கைசெய்கையிலிதோ. (ஆசை)

அன்னமேவாவென் றழைப்பவரில்லையே
ஆவலாய்க்கட்டியே அணைந்திடவே
என்னநான்செய்குவென் இங்கே இங்கனேபாவி (ஆசை)

புருடனின்றிமங்கை புவியினிலிருப்பது
புகழலவென்பதும் பொய்யலவே
சரணம்செய்குவேனெனை சருவும்சருவும்இங்கே (ஆசை)



அ-வ.—நாம் இவனைக்கண்டதே பெருமையல்ல இவனைக்கூடி அனுபவித்தாலே பெருமை இதற்கெப்படி நாமே முன்செல்பவன் போல் சென்று நமக்கு ஆஸ்ரேயன்கற்பித்த பதத்தைப்பாடுவோம் அப்பால் அவள் சொல்வதை கவனிப்போம் ஆ-வ.—அடா பாவி அவள் முன் செல்கின்றானே ஏது செய்கின்றானோ பார்ப்போம் இவனை மெச்சப்போகிறாளா நாம் போனால் நம்மைக்கண்டு நம்முடைய அந்தத்திற்கு மெச்சி நம்மை அவள் வேண்டுவாள் பார்த்து அப்பால் செல்லலாம்.

---

அரசன்-ஜாவளி.

கமாஸ்-ஆதிதாளம்.

வாடிநிற்பது ஏதுகாரணமோ அடி
வஞ்சியேகெஞ்சுவேன் சொல்வாய் (வாடி)

மோடியாருமோஇதோ தேடிவந்தனென்னை
கூடிசரசலீலைந்தாடி தாள்பணிகுவேன் (வாடி)

மாரன்வந்துனைநோவ சாரம்விட்டானோபாவி
சேரபுருடனுண்டோ கூறத்தயைசெய்யடி (வாடி)

ஆருலஉனக்குத்துன்பம் நேரிடமாச்சோமானே
கூராயெமபுரத்தே சேரச்செய்வேன்தேனே. (வாடி)

ப-வ.—அடி பாங்கி அவயார் உனக்குத்தெரியுமா. தோ-வ.—அம்மணி அவரைப்பார்த்தால் இராஜபுத்திரனைப்போ லிருக்கின்றது. உன்னையே உற்றுநோக்குகின்றார். ப-வ.—ஆமடி ஆம். ஆ-வ.—இராஜன் நல்லகாரியம் செய்தான் நாம் சொல்லிக்கொடுத்தப் பாட்டைப் பாடினான் நம்முடைய அழகும் வீரமும் வந்துவிட்டது. இனி என்னநடக்கின்றதோ சற்று நிதானிப்போம். அ-வ.—நம்மைக்கண்டமாறு வெட்கி தலைகுனிந்தாள் நாம் சென்று அவளுடைய விர்த்தாந்தத்தை விசாரிப்போம் நூறிப் பேசுவாளோ என்னமோ அப்படிக்குப்பேசில் நாம் வந்தவழியைப் பிடிப்போம் ஆஸ்ரேயனும் நமக்காய் அங்குஎதிர்பார்ப்பான் ஒருவேளை இங்கு வந்தால் எல்லாக்காரியங்களும் கெட்டுப்போகும் ஆ பெண்கிளியே நீ யார் எங்கிருப்பது உன்பெய

ரென்ன உன்னை மணம்செய்துக்கொண்ட மகானுபாவனுர் இந்தஏழைமீது தயவிட்டு வெளியிடுவாயா. ப-வ.—தோழி இதென்னவிபரீதமடி. தோ-வ.—அம்மா நீ பாடியதால் வந்தபலனன்றி வேறில்லை அவர்கேட்டதற்கு நியாயம் செப்பிவருவாய் நாம் இனி இங்கு இருக்கப்போகாது அரண்மனைபோவோம். ப-வ.—நல்லதடி கேளும் நான் சத்திய தரன் என்றபுத்திரி என் பெயர் இதுவேஇருப்பது சரஸ்வதிபுரம் எனக்கின்னம் மணமில்லை. அ-வ.—அப்படியா என்புண்ணியமே புண்ணியம்.

---

அரசன்-ஜாவளி.

பியாக்-ரூபகம்.

ஓ பெண்ணரசே உன்னைக்கூட — பிரியமாகுதே
என் அறிவும் போகுதே. (ஓ)

உன்னைக்கண்டபோதேமனம் உருகலானேனே
உண்மையிதுநீதான்வொன்றும் உரைக்கக்காணேனே
மனம் களைக்கத் * தோணேனே (ஓ)

வஞ்சமேதோநெஞ்சில்விட்டு கெஞ்சச்செய்குறாய்
கொஞ்சியாடி என்னைநீயும் கூடலாகாதோ
மொழி ஆடலாகாதோ (ஓ)

பொறுக்கமனந்தரிக்கேனுனைப் போற்றிசெய்கிறேன்
பொருமுமதன்கோரம்நீங்க பெண்ணேவாராயோ
என் கண்ணே சேராயோ (ஓ)

அ-வ.—அடி மாதே உன்மீது பெத்தவும் ஆசைகொண்டேன் என்காம வெறியை உன் கருணைக் கண்ணால் நோக்கி கடாட்ச் செய்யாயா நானே வீராண நகருக் கதிபன் என்பெயர் வித்திரசேனன் பாலுக்கும் சலத்துக்கும் பகையுண்டா எண்ணெய்க்கும் எள்ளுக்கும் எரிச்சலுண்டா வெண்ணெய்க்கும் நெய்யுக்கும் வியாஜ்ஜிய முண்டா கூடுவோம் வருவாயடி குயிலே. ஆ-வ.—நாமில்லாமல் அரசன் என்னமோ பிரயத்தினம் செய்கின்றான் முடி வாகுமா நம்மை யின்றி முடியாது நாமும் போகலாமா சீ





ச்சி போகப்போகாது நாமென்ன அழையாவீட்டிற்கு நுழையும் சம்மந்தியா நிதானிப்போம். ப-வ.—நீர் சொல்வது அடுக்குமா தாய்தந்தை மற்ற அரசர்கள் அறிய மாலையிடாத மணவாளனைக்கருதுவதினுல் மானக்கேடு லபிக்கும். அ-வ.—அதெப்படி மாதே. ப-வ.—விவாகமாகாமல் கூடினவளை வேசியென்பார்கள் அ-வ.—காந்தர்வ விவாகம் வேந்தரில் சிறந்ததடி கண்ணே. ப-வ.—அதனுல் கொடிய துன்பம் விளையும். அ-வ.—எப்படி. ப-வ.—துஷ்டியந்த மகாராஜன் சகுந்தலையை காந்தருவமாய்ப் புணர அவள் கெர்ப்பமுங்கி பஞ்சுபடாதபாடு பட்டதைக் கேட்டறியீரா போம். அ-வ.—ஆனுல் நீ யென்னை உன் தந்தையிடம் அழைத்துச் சென்று உனக்கு என் மேல் மனமிருப்பதாய்ச் செப்பி கூடுவாயடி. ப-வ.—அப்படிச்செய்தால் என்னை தாசிப்பெண் என்பார்கள். அ-வ.—நான் இங்கிருக்கின்றேன் என்படத்தைக்கொண்டேகி உன் தந்தைக்குக்காட்டி என்னை வரவழைக்கச்செய்தாகிலும் கூடுவாயடி குயிலே. ப-வ.—படத்தைக்கண்டு மோகித்த சித்திராங்கி கெதி நான்கேட்டிருக்கின்றேன் போம் போம். அ-வ.—மானே நான் சொல்வதையெல்லாம் தடுப்பது நியாயமோ. * ப-வ.—நீர் இப்படிக்கு என்னைக் கருதுவது உண்மையானுல் என் சுயம் வரக்காலம்வரையில் விரதம்பூண்டு அக்காலையில் வந்து என் கேழ்விக்கு விடைதந்து மணமெலாம் இங்கு நிற்காமல் நடந்துவிடும் துன்பம் விளையும் தொல்லையும் சூழும். அ-வ.—அடி என் விரகம் பொறுக்க வில்லையே. ப-வ.—பொறுக்காவிடில் பூமியிற் கிடந்து புரளும் நான் போகிறேன் வாடி பாங்கி இதென்னவம்பு. தோ-வ.—நல்லதம்மணி நடப்பாய். அ-வ.—ஆ. ஆ. இவளோ ஒரு பெண்பால் நம்மை அதிக அசட்டையாய்ப் பேசிச்செல்கின்றாள் இவளை விடாமல் குறுக்கே மறித்து ஒருவார்த்தை சொல்லிப்போவோம் அடிமாதே உனக்கிதோயந்தனம். ப-வ.—மாதைப் பணிபவன் மந்தன் நடந்திடும் அறிவில்லானே. அ-வ.—அப்படியா அடி, உன்னை நான் எப்படியும் மாலையிட்டு கடுஞ்சிறையில்வைத்துஉன் கருத்தைக்குலைக்காவிடில்நான் க்ஷத்திரியனல்லசாஸ்திரியடி. ப-வ.—ஆ ஆ அப்படியாக விதி யிருக்குமாகில் நான் உன்னையேகூடி உனக்கே ஒருஆண்குழந்தையைப்பெற்று உன்னைச் சிறையில் அடைக்கச்செய்வேன், இல்லாவிடில் நான் ராஜன்மகளல்ல வே

சைமகள் போம்போம் புத்தியில்லாமே. அ-வ.—ஐயோ பத்மாவதி போய்விட்டாளே இனியென்னசெய்வோம் காமன் வாட்டுகின்றனே துயரமாகின்றதே.

---

அரசன்-ஜாவளி

செஞ்சுருட்டி-ஏகதாளம்

மனமேதேதையங்குதே மாததோமறைந்தனளே. (மன)

கோரினன்பலவிதம் கூவியும்கேட்காமல்
சீறியேபோயினள் சிவ சிவனே (மன)

பந்தையமாடியே பாவையும்போயினள்
எந்தவிதமாய்மனம் இருக்குமவனே. (மன)

பெண்ணிடமோடிக்கே பின்னிடலானேனே
என்னிடஉயிரினி இருந்திலனே. (மன)

ஆ-வ.—மன்னவன் அவள் மிடைக்காதலால் மெத்தவும் துயரப்படுகின்றான் இந்த சமயம் நாம் போகவேண்டும் இல்லாவிடில் ஒருவேளை பிராணனை நீக்கிக்கொள்வான் ஓ அரசே. இதென்னகோலம் என்னை அங்குசயனிக்கச்செய்து இங்குவந்திப்படி அழுகின்றகாரியத்தைச் சொல்லும். நான் சற்றுநேரம்பிரிந்திருந்தால்உனக்குசங்கடமே வருகின்றதே. அ-வ.—ஆ என் ஆஸ்நேயனே என்கதியை என்னசொல்வேன் ஒரு பெண்என்னை அவமதிக்குங்காலமாச்சுதே. ஆ-வ.—அவளார் வெளியிடும். அ-வ.—கேளப்பா கைஜாடை காட்டிப்போனளே.

---

அரசன்-ஜாவளி.

சங்கராபரணம்-ரூபகம்.

சொல்லிப்பயனுண்டோ சோர் (சொ)

மெல்லியவள் இங்குவந்தி மிருதுமொழி யிடமுந்தி
இல்லாதெல்லாம்சொல்லியென்னை அல்லல்செய்துபோயினளே. (சொ)



காமஜீமானுமேவி கன்னிவாடியெனவுங்கூவி
காமதமாய்வார்த்தையாடி தானேபோனளேதோழி. (சொ)

கோபமாகினாளும்பேசக் கோதையவள்மிஞ்சி ஏச
சாவதின்றி இனிவாழ்வில் சரியலநான் ஏதுசெய்வேன் (சொ)

ஆ-வ.—அப்படியா நல்லது அவள்கைகளைக் காட்டினளென்றையே அதைக் கண்ணுற்றுப்பார்த்தையா. அ-வ.—பார்த்தேன். ஆ-வ.—எவ்விதங்காட்டினள் எனக்குக் காண்பியும். இதோ பார்ப்பாய் ஆ-வ.—சரிதான் வாரும்போவோம். வே-வ.—அரசனும் ஆஸ்நேயனும் இதோவருகின்றார்கள். அ-வ.—அடா வேடர்களே நகரம் போவோம் வருவீர்கள். வே-வ.—மகாபாக்கியம் சுவாமி. தோ-வ. போற்றி போற்றி அம்மணி. ப-வ.—என்னடிபாங்கி. தோ-வ.—நான் கொலுமுகம்போய் வருகின்றேன். ப-வ.—நல்லதடி.

சத்தியதான கொலு.

சத்-வ.—நாடுசெழித்து குடிகள் சுகமாயிருக்கின்றார்களா வெளியிடுவாய் சாதுரியனே. ம-வ.—சுவாமி தங்களுடைய கன்னெறியினால் வருணபகவான் சுபவிருஷ்டி நடத்த எங்கும் ஜலம் நிறைந்து பயிர் ஓங்கி குடிகள் சுகத்திலிருக்கிறார்கள் ஆனால் வருகிறவருடமும் இப்படிக்கி மழை பெய்யுமானல் குடிகளுக்கெப்போதும் சுகமிராது வேந்தே இப்போது மானத்தின் நீரோட்டத்தை நோக்கிலோ அதிவிருஷ்டி முன்னுக்கு உண்டெனக் காட்டுகின்றது வேந்தே. ச-வ.—இதற்குக் காரணம் ஏதுவாயிருக்கும் உரைசெய்வாய். ம-வ. நானென்ன சொல்லுவேன் பத்மாவதியம்மாளுக்கு கலியாணம் முடிவாகிறபரியந்தம் இப்படிக்கே யிருக்கும். ச-வ.—அப்படியாநல்லது. தோ-வ.—ஆண்டவா பாராக்கு. ச-வ.—தோழி நீ வந்தகாரணம் ஏதுவோ வெளியிடுவாய். தோ-வ.—சுவாமி தங்கள் குமாரத்தியின் விவாகம் இன்னம் முடிவுசெய்யாமல் இருக்கின்றீர்களே என தியாபகப்படுத்திச் செல்லவந்தேன் சுவாமி. ச-வ.—அப்பா மந்திரி என் அருமைமகளாகிய பத்மாவதிக்கு விவாகமென சுயவரம்நாட்டச் செய்து ஐம்பத்தாறு தேசத்திய மன்னருக்கெல்லாம் மணவோலை எழுதுவாய். ம-வ.—நல்லதாண்டவா.

விக்கிரசேன் கொலுவு

தூ-வ.—போற்றி போற்றி ஆண்டவா. அ-வ.—நீ ஆருடைய தூதன் எங்கிருந்து வந்தனை வெளியிடுவாய். தூ-வ.—ஆண்டவா சரஸ்வதிபத்தையாளும் சத்தியதர்மமகாராஜன் குமாரத்தியாகிய பத்மாவதிக்கு விவாகம் நடக்கிறபடியால் மண ஓலை கொணர்ந்தேன் வேந்தர்வேந்தே. அ-வ.—சந்தோஷம் போவாய் தூதனே இனி இதற்கேற்றபடி நாம் சிறையில்வைப்போமென்ற அவனுக்கே விவாகமெனத் தெரிந்தோம் நாம் சென்று அவனைக் கலியாணஞ்செய்துவந்து சிறையிலிட்டு நாம் வேறு மாதுடன்கூடி வாழவேண்டும் கேள்விக்கு என்செய்வோம் ஆஸ்ரேயனைக் கேட்போம் அப்பா ஆஸ்ரேயனே பத்மாவதி கலியாணத்திற்கு போகவேண்டுமே. ஆ-வ.—என்னைக் கேட்பானேன். அ-வ. நீ யென்னை இப்படி நடுஆற்றில் கைவிடுவது அடுக்குமா அவள் கேள்விகேட்டால் நான் என்னசெய்வேன். ஆ-வ.—அப்படியா என்னைக்கூட அழைத்தேகின்றனையா. அ-வ.—ஆம். ஆ-வ.—ஆனால் நான் அங்ஙனே சொல்லிக்கொடுக்கின்றேன். அ-வ. அது எப்படி நடக்கும் வெகுமன்னர்களும் வந்திருப்பார்களே ஆ-வ. இருக்கட்டும் நடநட. அ-வ.—ஆ விதியே.

---

அரசன்-ஜாவளி.

செஞ்சுருட்டி-ரூபகம்.

கொண்டயெண்ணம் கைகூடுமோ கூடாதோ விதியே, நான்
தெண்டனிட்டும் வணங்காதவனை
சிறைவைப்பேனென உரைசெய்தபடி (கொண்)

பத்மாவதி தன்னையே நாடும்
பாணிக்கிரகணம் பண்ணிடோ
பந்தமிட்டவாறு பாவையைக்கெடுக்க
பரமனருள்தருவனோ தாமோன். (கொண்)



வேந்தர்முன்பு மாதுமே கேள்வி
வெளியிட என்காதுமே
வெந்துவுளரும் வெருளுமேயிவள்
விப்பாய்ப்பேசுருனே பாம்பாய்ச் சீறியே (கொண்)

இங்குஉயிர் படிக்கவேளிதி
இட்டையோவசை படிக்கவே,
எங்கிவாடல எனேமனதே
இந்தவாளுக்குயிர் தந்திடுவாயினி. (கொண்)

ஆ-வ.—வேந்தே நீர் ஏன் விசனப்படுகின்றீர் வாரும் எப்படியும் பத்மாவதியை உமக்கு மாலை திட்டச்செய்கின்றேன். அ-வ.—நல்லது. சத-வ.—அப்பா மந்திரி ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும் வந்திருப்பதனால் மணவரைக்கி என் அருமைமகளாகிய பத்மாவதியை வரவிடுவாய். ம-வ.—நல்லது ஆண்டவா அம்மா தோழி உன்தேவியாரை அழைத்துவருவதற்கு இதுவே சமயம்.—ச-வ. அம்மணி நீ யிந்தமாலையைத் தாங்கி உனக்கு மனமுள்ளவேந்தருக்கு அணிந்து சுகம் பெறுவாய் கண்மணியே. ப-வ.—நல்லது தந்தையே அடிபாங்கி என் கேள்வியை முன்செப்புவாயடி. தோ-வ.—நல்லதம்மணி வேந்தர்களே என் தேவிக்கு ஒரு கேள்வியுண்டு எல்லோரும் தங்கள் தங்களிடத்திலிருந்து கவனமாய்க் கேட்கவேண்டியது கேள்விக்கு விடைதந்தவருக்கு என் தேவி மாலைதரிப்பாள். அ-வ.—அப்பா ஆஸ்ரேயனே சீக்கிரம் என்னமோ சொல்கின்றேன் என்றையே வெளியிடு அதோ தோழி கேள்வியை சொல்லப்போகிறாள். ஆ-வ.—அப்படியா என்க்கு என்னபிரயோசனம். அ-வ.—அப்பா உனக்கு என்னவேண்டியதோ கொடுக்கின்றேன் இவனைக்கூடி சுகிப்பேன் என எண்ணாதே நேசா. ஆ-வ.—அப்படியா ஆனால் அதற்கு மறுமொழி பத்மாவதியென்று சொல் போ போ.

---

தோழி-விருத்தம்.

அன்பத்தோராட்சரத்தில்மூலம்சேர்த்து
ஆனதொகைதனைவகுத்து அறையக்கேளும்
முன்பத்தில் முதலாகும்எட்டில் மூன்றும்
முடிவுடனே பதினொன்றில்முறைமையாக
தன்கலைபத்தன்னிரெண்டைத்தாவிணைத்து
தார்வேந்தே பதினேழில்முதலைக்காண்பீர்
சன்மார்க்கநீதிநெறிஉணர்ந்தபேரே
சாற்றுவீர் பூண்டவரார்சபையிற்றானே.

அ-வ.—இதுதானா ஒரு பெரியகேள்வி (பத்மாவதி) நீயே. ப-வ.—சிவ சிவ சம்போ இதோ நான் வித்திரோசமகாராஜனுக்கு மாலையிட்டேன் காரும்காரும் கருணாநிதியே. ச-வ.—வேதியர்களே இனி மற்ற சடங்குகளை முடிவுசெய்வீர்கள். அ-வ.—மாதே இனி நான் என் தேசம் போகவேண்டும் உன் கருத்தெதுவோ வெளியிடுவாய். ப-வ.—பிராண நாதா நீரில்லாதவிடத்தில் நானிருக்க காரணமுளதோ அடியாளும் வருகின்றேன் சுவாமி. அ-வ.—ஆனால் வருவாயடி மாதே பெண்ணே என்னுடாகிய விரதம் வந்தோம் கண்டையா. ப-வ.—ஆம் பிராணநாதா. அ-வ.—அடி பத்மாவதி அன்று நான் உன்னுடன் பந்தையமிட்டவாறு உன்னை நானேவிவாகம்செய்தேன் இனி உன்னை சிறையிலடைக்கின்றேன் உன் வாக்கின்படி நீநடத்துவதைப் பார்ப்பேனடி ஆரடா சேர்வை இவளை உன் காவலுக்குள்ளாக்கி நகர்வெளியிலிருக்கும் மாளிகையிலிருத்துவாய் வேற்று மனிதர்வாடையடிக்கப்போகாதுபத்திரம் சிரசாக்கினைசெய்விப்பேன். சே-வ.—நல்ல தாண்டவா அம்மணி இந்தமனையிலிருக்கவேண்டும். யாருடனும் வசனிக்கப்போகாது தாயே. ட-வ.—அப்படியே இருக்கின்றேன் ஆனால் என்னுடன் எதாகிலும்வார்த்தையாட உன் பெண்சாதியை தினம் கொஞ்சம்போது என்னிடத்தில் வந்து போகச்செய்வாயா, சே-வ.—அப்படியே அம்மணி அடாகாவலனே என்வீட்டிற்குச் சென்று நான் இங்கிருப்பதாய்ச் செப்பி என்பெண்சாதியை வரச்செய்வாய். கா-வ.—நல்லதையா ஆ அம்மா சிறு நங்கா உன்னை உன் கணவன் நகரத்துக்கு வெளியிலிருக்கும் மாளிகைக்கு



வரச்சொன்னார் போக[redacted]போகின்றேனப்பா. சேர்வையே என்னை அழைத்தகாரியம் என்னமோ. சே-வ.—பெண்ணே நமது அரசன் தன்தேவியைசிறையிட்டிருப்பதால் நீ வீட்டுவேலைகள் தீர்ந்தபோது இங்கு வந்து கொஞ்சம்போது பேசிக்கொண்டிருந்து அந்தம்மாளுக்கு தயிரிய வார்த்தைகள் சொல்லுவாயடி. பெ-வ.—நல்லது சேர்வையே.

---

பத்மாவதி-கண்ணிகள்.

பியாக்-ரூபகம்.

எதுசெய்குவேன் இனி எவரைநோகுவேன்
ருதுசெய்தானே சொன்னவாறுமே. (ஏது)

ஆரால் என்பந்தம் இனி ஆகிடும் சந்தம்
ஊருக்கிச்சேதி உரைசெய்ய விதி. (ஏது)

சிறையில் சிக்கினேன் என் சிந்தைசொக்கினேன்
குறைவினையிதாய்க் கோதைகண்டனே. (ஏது)

ஈன்றவர்மனை இப்போ திடைந்ததாம் வினை
தோன்றலேஉனை தொழுதிட்டேன் தேவே. (ஏது)

பெ-வ.—அம்மணி நீரிப்படித் துயரப்படுவதில் என்னபலன் விதியை விலக்க எவரால் முடியும் தாயே பொறுத்து உனக்கு சிறையிருக்க வந்தகாரணம் எதுவோ வெளியிடாயம்மணி.

பத்மாவதி [illegible]வளி.

[illegible] ரூபகம்.

சொல்லச்சொன்னவாறுகேட்பாய் [illegible] (சொ)

அல்லல்வந்தமார்க்கமிது [illegible] அறைகுவேனே
அரசன்வேட்டைஆட [illegible] அந்நாள்[illegible] (சொ)

வனத்திலாடவந்த என்முன் [illegible] ஆகிலுமே
வாடிகூடவென நானும் [illegible] நின்றுமே (சொ

உனைமனைக்கு [illegible] உருக்கஞ்செய்வதும்
உன்னையேயன்சொன்னபடி நம்பிச்செய்தனே (சொ)

நாஹனைக்கோர் சிறுவனோடே காடுபெற்றுமே
கனைக்கதிரை பிடிபேனென்ற காவும்போச்சுதே (சொ)

என்சபதம்முடிவுசெய்வோ வெவ்வோகாணேனே
இன்றுளென்னவி வாடலானே னேதுசெய்வனே (சொ)

சி-வ.—அம்மா உன் சங்கதியையெல்லாம் கேட்ட என்மனம் உலைமெழுகாய் உருகிவிட்டது என்னாலாகவேண்டிய காரியங்களிருந்தால் வெளியிடில் தடையின்றி என்புருஷனுக்கும் தெரியாமல் முடிவுசெய்கின்றேன் அம்மணி. ப-வ.—நீயோ மகாஉத்தமி இக்காலத்தில் எனக்கு நீயேதாய் இந்தரத்னகண்டியை கொண்டுபோய்நாளைவரும்போது ஒரு ஓலையும் எழுத்தாணியும் கொண்டுவருவாயம்மா. சி-வ.—நல்லதம்மணி. ப-வ.—ஐ பரமசிவமே நாஹனுக்கு என்ன குறைசெய்திருந்தேன் என்னை இக்கெதி ஆக்கினை உனக்கழகோ.

---

பத்மாவதி கண்ணிகள்.

சங்கராபரணம் ரூபகம்.

எனினம்வாரேனென்ற எந்திழையைக்காணேனே ஓ
மானே எங்கும் மரவிகாவா மாதுவாட லாகுமோதான் (எனி)

உண்மையாக மொழிகளாடி உரைத்தனளே நேற்றுமே
கண்டு முகமுந் சுளிக்கலாச்சே கைலைவாசா பாருமே (எனி)

ஓலைகொண்டு வாரேனென ஓதிச்சென்ற மாதினாளும்
வேலைசெய்து திறகிறளோ லெதுவோ காணேனே (எனி)

இன்றுமவள் வருகாவிடில் இறப்பதுவேமுடிவதாரும்
நன்றுசெய்வேனென்றமாது காடுவரச்செய்யுமீசா (எனி)

சி-வ.—போற்றி போற்றி அம்மணி. ப-வ.—நான் சொன்னதைக் கொண்டு வந்தாயா. சி-வ.—இதோ கொணர்ந்தேன் தாயே கேள்ளு



வாய். ப-வ.—சாஸ்வதி புரத்து அரசனுக்குச் சேரும்படி கிருபைசெய்ய வேண்டும் பாதம் பணிந்தேன். சி-வ.—அம்மணி நானே சென்று கொடுத்து மறுமொழி கொண்டு வருகின்றேன் தாயே. ப-வ.—உன் கணவன் தேடுவனே. சி-வ.—நான் என் தாயாரிடம் போய்வருவதாய்ச்செப்பிச் செல்லுகின்றேன். ப-வ.—அப்படியே செய்து என் கருத்தை முடிவு செய்தால் உனக்கு மெத்தவும் சவுக்கிய முண்டு தாயே. சி-வ.—நீயொன்றுக்கும் அஞ்சவேண்டாம் தாயே சேர்வையே ஒரு ரகசியம் கேளம்மா. சே-வ. என்னடி அது. சி-வ.—தேவி அவர்கள் என்வார்த்தைக்குச் சந்தோஷப்பட்டு ரத்தின கண்டியை கொடுத்தார்கள் அதை இங்கு வைக்கப்போகாது நான் சென்று என் தாயிடம் பத்திரப்படுத்தி வருகின்றேன் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும். சே-வ.—அப்படியே நீ பத்திரமாய்ப் போய் வருவாயடி மெதுவாகச்சீக்கிரம் நீங்கிவிட்டுவா மாதே.

---

பத்மாவதி ஜாவளி.

செஞ்சுருட்டி ரூபகம்.

போகிறதாய்ச்சொன்னமாது போனளோதான்காணேனே
வேறெதுவோ வேலை செய்ய விடைகொடுத்து விட்டனளோ (போ)

சொன்னபடிசெய்வளென்றே சுவாமியேபோலநம்பினேன்
என்ன குறை செய்தேனோவென ஏங்குதுளம் ஐயையோ (போ)

நான்கொடுத்த ஓலைதன்னை நாயகிக்கு தந்தாலென்னை
மானம்போக பேசி ஏசி மன்னன் கொலை செய்குவானே (போ)

இந்த வேளை சுந்தரேசா எனக்கருள்செய் பவநாசா
வந்தனங்கள்உனக்கிதோநான் வாடிவணங்கியிட்டானேன் (போ)

ப-வ.—சிவமே என்னிடம் போகின்றேன் என்று சொன்னவள் போயினளோ என்னமோ என்மனம் கலங்குகின்றது அவள் ஒருவேளை போகாதிருக்கில் நீ உட்புகுந்து போகச்செய்து என்விரதம் பலிக்கச்செய்யும் விசுவேசா, சி-வ. இதோ நாம் சாஸ்வதிபுரம் வந்தோம்

வேந்தனிடம் செல்வோம். போற்றி போற்றி ஆண்டவா ச-வ.—அம்மா நீயார். சி-வ.—இந்தச் சிட்டை தாங்களே பார்க்கவேண்டியது. ச-வ.—நல்லது அம்மா. சத் வ.—ஆ என் அருமைமகளே உனக்குமிக் கெதி சிவன் அமைத்தாரு நல்லதாகட்டும் மந்திரி நீ சந்திரசேகர பட்டத்தி னெல்லையிலிருக்கும் மாளிகைக்கும் ஷீராணத்தாள் நகருக்கு வெளிப்புறமிருக்கும் சிங்காரமாளிகைக்கும் பூமியில் நாலுபேரும பல்லக்கும் நடமாடும்படிக்கி ஒரு பாதாள சுரங்கம் செய்விப்பாய் சீக்கிரம் காலதாமசம் செய்யப்போகாது. ம-வ.—நல்லது இதோ முடிந்து செய்விக்கின்றேன் சுவாமி. ச-வ.—மாதே நீ போவாய் காரியமுடிசெய்வதாய் என்மகளுக்குத் தெரிவிப்பாய் மந்திரி இந்தமாதுக்கு வேண்டிய பணிகள் கொடுத்தனுப்புவாய். ம-வ.—நல்லதாண்டவ இவைகளைக் கொள்ளுமம்மா. சி-வ.—மகாபாக்கியம் பெற்றேன். விடைகொள்ளுகின்றேன் சுவாமி. ப-வ.—சேர்வை பெண்சாதி போனவளின்னம் வராதகாரணம் ஏதுவாயிருக்கும் போயினளோ இல்லையோ எல்லாம் நாளைக்குத் தெரிகின்றது அவள் போயினது மெய்யாயிருந்தால் நாளைக்கு வந்து தெரிவி வருவாள். சி-வ.—போற்றி போற்றி அம்மணி. ப-வ.—அம்மா என் தந்தையைக் கண்டாயா என்ன சொன்னார் சொல்லுவாயம்மணி. சி-வ.—உன்னுடைய தந்கப்பன் சிட்டைவாசித்து சாவுக்குச்சரியான மூர்ச்சைகொண்டார் சுரங்கம் வெட்ட உடனே உத்திரவு செய்தார் எனக்கு இவைகளை வெகுமதியாய்க்கொடுத்தார். ப-வ.—சந்தோஷம் இந்த முத்தாரம் நானீகொடுத்தேன் கொள்வாயம்மா. சி-வ.—எங்கள் மூதாதைகளுக்கு மகிதாகிய பொருள் நான் அடைந்தேன். விடை கொள்கின்றேன் தாயே. ப-வ.—நல்லதம்மா நாளையிலிருந்து எட்டு நாளைக்கு ஒருதரம் வருவாய். சி-வ.—அப்படியே தாயே. ப-வ.—இதோ சுரங்கம் வெட்டிக்கொண்டுவருகின்றார்கள் நாமிங்கிருக்கப்போகாது. ஒ-வ. வருவீர்களம்மா போற்றி போற்றி சுவாமி சுரங்கம் முடிந்தது. ச-வ.—சந்தோஷம் அம்மா தோழி நீயிந்த சுரங்கத்தின் வழி சென்று உன் தேவியை அழைத்து வருவாய். தோ-வ.—நல்லது சுவாமி.

---



பத்மாவதி ஜாவளி
பியாக் ரூபகம்.

ஏனைச்சிறையி விருக்கவிட்டாய் சிவமே
ஏங்கித்துயர் ஒங்கிமனம் வாங்குதே சிவமே (ஏனை)

காமியார்பி வனத்தி லென்னை கருதிநின்றாரே
யன்னி சொன்னவாறு நீதி குன்னவிட்டாரே (ஏனை)

சிறையிலிட்டு பார்ப்பேனென்று செப்பியவாரே
சிந்திக்கவே தந்துயிட்டார் எந்தனைப்பாரே (ஏனை)

மணந்தவனோ டாடிபிராமா பாவியாகினேன்
மண்ணிலினியிருப்பதே தனுயிர் மாய்ப்பேனோநானே (ஏனை)

சொன்னபங்கையங்கெலிக்காவிழ்ல்ஸ்தாலம்வேண்டனே
சோகமீற ஆவிபோக்கி சோருவேன் சிவமே. (ஏனை.)

ப-வ.—நமது தேவி தனியாய் ஒரு அறைக்குளிருந்து புலம்பகாம் காணவும் விதி நேரிட்டதல்லவா இருக்கட்டும் அம்மணி நா அடியாள் வந்தேன் கபாடந்திறப்பீரம்மா ப-வ.—வந்தையா.

---

பத்மாவதி ஜாவளி.
தேசியதோடி ஆதி.

அடி தோழி யெந்தன் அவதியைப்பாரடி
அரசன்பந்தையைப்போல அருஞ்சிறை யிட்டானடி (அடி)

பிடிவாதம்பிடித்தவன் பேசியவார்த்தைபோல்
பெண்ணேஎனைமணந்து பெருந்துயருறச்செய்தான்
விடித்தவென் சபதமும் வீணதாய்ப்போகுமே
வெட்கமடைந்துலகில் விருத்த நாடேண்டி உயிர் (அடி)

ப-வ.—அம்மா நீஒன்றுக்கும் அஞ்சாதேஎன்பின்பற்றிவருவாய் மணி. ப-வ.—நல்லதடி பாங்கி அடி நான் இங்கிருக்கின்றேன் தந்தைக்குச்செப்பி பரதசாஸ்திரமுணர்ந்த சங்கரபட்டரை அ

றைழைத்துவரச்சொல்லாய். ம-வ.—நல்லதய்யா. ச-வ.—அய்யனே நீ என் குலத்தில் உதித்த காரணமோ இவ்வித அன்பர்களுக்கு உதிய வளாகினையே நான் பூஜை செய்வேன் அம்மா என் அருந்தவத்தில் உதித்த அன்னமே சங்கரபட்டரையும் அழைத்து வந்தேன் உன்னைச்சி றையிலிட்ட பாதகனை இப்போதேயமபுரம் அனுப்புகின்றேன் அய்யா. ப-வ.—போற்றிபோற்றி தந்தையே அடியாள்செய்யும் ஒருகாரியத்தை க்கண்டு நீங்களே சந்தோஷிக்கப்போகின்றீர்கள் பொறுப்பீர் பிதாவே. ச-வ.—நல்லது மகளே சுவாமி சங்கரபட்டரே தாங்களொரு நட்டுவனைப்போல உருமாறி விராணத்திரசனிடம் சென்று நாட்டிய க்கச்சேரிக்குத் தாம்பூலம் வாங்கிக்கொண்டுவாரும் நானும் உருமாறி டாரிகோயில்களில் கூத்தாடும் குறத்தியைப்போல அவர் முன் னடிக்கின்றேன் போயீநீ என்னை அனுப்பும்படிக்கித் தங்களை கோருவார் சம்மதியும், அப்பால் நடப்பதைக் கவனிப்பீர் சுவாமி ச-வ.—அப்படியேயாகட்டும் இதோ செல்கின்றேனய்யா. ச-வ.—சுவாமி போற்றி போற்றி ஆண்டவா. மி-வ.—நீங்கள் யாரப்பா. சங்-வ.—சுவாமி நாங்கள் நட்டுவர்கள் தங்களுடைய பெருமையைக் கேள்விப்ப ட்டுவந்தோம் ஒரு நாள் கேளிக்கைக்குத் தாம்பூலம் கொடுக்கவேண் டும். மி-வ.—ஆடுவது புருஷர்களோ பெண்களோ. ச-வ.—பெண் கள் சுவாமி. மி-வ.—பால்யரோ பருவமடைந்தவர்களோ. ச-வ.— பருவமடைந்தவர்கள். மி-வ.—சந்தோஷம் நாளைக்கு வருவீர்கள். ந-வ.—மகாபாக்கியம். ப-வ.—போற்றி போற்றி ஆண்டவா. மி-வ. பெண்ணே இன்னம் தடையென்ன. ப-வ.—இதோ சாமி.

---

பத்மாவதி-ஜாவளி.

இ-ம்-காபி-ஆதிதாளம்.

என்மேலாசை இல்லாமல்நீ யிருக்குங் குறி அடிக்காதடா சாமி.
மன்மதனும் மாறிமாறி வாளிதானுமுன் வஞ்சமென்னடா சாமி.

| | |
|---|---|
| அன்புடன் உன்னையே | அணையவேணுடியே |
| ஐயனே வந்தநாம் | அமிருந்தாயே |
| ஆசைமீறி | அங்கம்வாடி |
| அருவுமநுறுது | நிலையேபாபாளி. (என்) |



| | |
|---|---|
| என்னமோசொல்வது | என்றெண்ணவேண்டாம் |
| ஈசனறிவானுண்மை | இது இதுவே |
| நன்மைமோக | நாயகனே |
| நங்கைவாடுதல் | நாயமல்ல பாவி (என்) |
| ஐய்னேனைப்பெண்ணாய் அமைத்ததோ | கொடுமை |
| அடமது செய்வது | அதற்குமேற்கொடுமை |
| நயமுமீறி | நாரிகோரி |
| நாவுமுலருது | நலமலடாசாமி (என்) |

அ-வ.—ஆ. மெத்த சந்தோஷம் இந்தவரத்தின ஆரங்களை க்கொள்ளுவாய் மாதே இவளைப்போன்ற அழகுடைய பெண்ணைச் சேராத ஜன்மம் என் நமக்கோ அதிக காமமீறுகின்றது இவளோ கூத்தாடுங் குறத்தியா யிருக்கின்றாள் என்செய்வோம் காமிக்கு குலமேது குணமேது எப்படியுங்கூடுவோம்.

---

பத்மாவதி-ஜாவளி.

இராகம்-காபி-ஏகதாளம்.

| | |
|---|---|
| எதடாயித்த | கூதுகள்கற்றாய் |
| மாதினைவாடவைத்து | மானமோசாமியே. (எத) |
| மனதினிலென்னமோ | மர்மமதிட்டுமே |
| உனைவிடமற்றவரை | ஒருநாளுங்கருதேனடா. (எத) |
| நிதமுந்தடிகளை | நினைவினி லூட்டியே |
| நிற்கின்றேன் இதோமோடி | நீக்கிக்கூடடாசாமி. (எத) |
| வலியவந்தேனென | வஞ்சமோபாவியே |
| வாடுதேமேனியும் | வந்தனம்தந்தனேயினி. (எத) |

அ-வ.—இவள் சொல்லும் மொழிகள் என்னை மோகசாகரத்தில் மூழ்கச்செய்கின்றதே கீழிறங்கி ஒரு முத்தமாகிலும் கொடுக்க ...... அப்பா ஆஸ்ரோயனே என்ன யோசனை. ஆ-வ.—உனக்கு பதில் நான்கொடுத்துவரட்டுமா. அ-வ.—அடாபடுபாவி என்னை யித்தவேளை

யில் காப்பாற்று இல்லாவிடில் என் உயிரைமாய்ப்பேன். ஆ-வ.—பொ
று நான் யோசிக்கின்றேன்.

---

பத்மாவதி-ஜாவளி.

இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

சாமியேயிதோசரணம் — செய்குவேனே
அனுமானம் — இன்னம் என்னடா. (சாமி)

கொங்கையும்விம்முது — கூடவுந்தேடுது
இங்கினிச் — செய்வதென்னடா. (சாமி)

இடையதுதுவளுது — என்னமோஉருகுது
நடையின்ன — மாருமோடா. (சாமி)

கண்களும்சோருது — காம்மும்மீறுது
புண்படுத்துவ — தென்னடா. (சாமி)

அ-வ.—மாதே யிந்த முத்து கண்டிகளையும் கொண்டு மனங்களி
த்து அடியேனையும் களிக்கச்செய்ய கவனிப்பாய். ம-வ.—நமது அ
ரசன் இந்த சுந்தரமுகுறத்திமீது அதிசமோகமாயிருக்கின்றார் நாமி
னி இங்கு இருக்கப்போகாது அப்புரம்போவதே உத்தமம். அ-வ.—
அப்பா ஆலோசனை யோசனைசெய்தையா எனக்கு இறக்குங்காலம்
வந்ததுபார் இனி பொறுக்கேனடா பாவி போகுது உயிர். போகுது.
ஆ-வ.—அவளைக்கேட்டால் முடியாது நட்டுவனை அழைத்து பரியா
சைசெய்து வசப்படுத்திக்கொண்டால் உமது எண்ணம் முடிவாகும்
அ-வ.—அப்படியே (சுவாமி நட்டுவரே இப்படிவாரும் இந்த ஆசனத்
திலிரும்.) ந-வ.—நல்லது வேந்தே அ-வ.—சுவாமி என்னை எம
தூதர் வந்தழைக்கின்றார்களே நீர்தயவிட்டால் பிழைப்பேன் இல்லா
விடில் இறப்பேன். ந-வ.—வெளியிடும் வேந்தே. அ-வ.—அந்த
மாது ரத்தினம் ஆர். ந-வ.—என்புத்திரி. அ-வ.—அவள்பே
ரில், எனக்குண்டாகிய மோகத்தைத்தீர்க்கச் செய்வீர். உமக்கிந்த
நாட்டில் பாதிகொடுத்தேன் இதோ சாசனம் எழுதினேன ஒப்பும்
சுவாமி. ந-வ.—இனிஎன் தடையில்லை, என்குமாரத்தியை அனுப்பு



கின்றேன் சமாதான மொழியாடி வசப்படுத்திக்கொள்ளும். அவ
ளும் மகா சரசி. அ-வ.—சீக்கிரம். ந-வ.—இதோ ஆண்டவா.

---

பத்மாவதி-ஜாவளி.

...கம்-கன்னடா-தாளம்-சாப்பு.

வாராயா, வாராயா, — வாராயா, வாராயா.
சாமிமையல் — தீராயா (வா)

சங்கையா — துர்சங்கையா
கொங்கையைத்தொட்டுஎனை இங்கையேகூடிஆட (வா)

சோருது — உட்கோருது
ஊருதுகாமவெள்ளம் — மீறுது சோருதுடல் (வா)

சொல்லடா நீ — சொல்லடா
கல்லடாயுந்தன்மனம் வில்லொடாகொல்லுதிதோ (வா)

அ-வ.—அடி பர்தமி சீக்கிரம் வந்துன்பாதத்தை என்மீதிட்டு
குந்தாயா, வந்தாயா, சுகம் தந்தாயா, மதனை நொந்தாயா.
ஆ-வ.—என் பெற்றுகின்றீர் நான் சாடைசெய்து அழைக்கின்றே
ன். ந-வ.—அம்மணி வேந்தன் மோகமீறி அழைக்கின்றார் தாயே.
ப-வ.—நான் போகின்றேன். போற்றி போற்றி. என் பிராண
நாதா. அ-வ.—சந்தோஷம் சந்தோஷமடி மாதே தயவுசெய்து என்
னைத் தழுவவருவாய் கண்ணே, கரும்பே, கற்கண்டே, கனிரச
மே, காமக்கிளியே. ப-வ.—அரசே இது எங்கள் மறுப்பட்டா குறக்கு
லத்திற்கு அடுக்காதே, நான் செய்வதென்ன மகாராஜனே.
அ-வ.—அடி பெண்ணே உனக்கப்படிக்கு மனம் இல்லாவிடில் இந்த
வாளை எந்தி என்னை கண்டித்தாகிலும் செல்லுவாயடி கண்ணே.
ப-வ.—அரசே அப்படிக்குச் செய்வதெனக்கடுக்குமா உம்மை நான்
கூடினால் நாடெல்லாம் அறியும், அப்பால் என் குலத்தார் என்னை
நீக்கினால் நான் ஜீவிப்பதெப்படி. அ-வ.—என்னிடம் வருவாய்.
ப-வ.—இந்தமோகம் அப்போது இராது நீர் மறக்கிலோ. அ-வ.—
நான் தடைசெய்யேனடி. ப-வ.—நான் இறந்தாலும் என்னுடனிரு

க்கும்படி ஒரு அடையாளம் கொடுத்தால் ஒப்புகின்றேன். அ-வ.— எனக்கு ஒன்றும் தோன்றவில்லை அது எவ்விதமானதோ வெளியி டுவாய். ப-வ.—இன்றைய வருடம் மாதம் தேதி உம்முடைய திருநாமமும் என் இடதுகையில் பச்சைகுத்துகின்றவளால் உம்மு டைய கையாலெழுதிக் குற்றச்செய்து ஒரு முச்சலிக்கை நான் ஒரு வேளை வந்தால் காப்பாற்றுவதாயும் எழுதிக்கொடுப்பீரா? அ-வ.— அப்படியே இதோ முச்சலிக்கை எழுதினேன். கட்டியனே பச்சை குத்துகின்றவளை அழைத்தோடி வருவாய். க-வ.—அப்படியே இ தோ அழைத்து ஓடிவந்தேன் அரசே,

---

பத்மாவதி ஜாவளி.

இராகம்-காபி-தாளம்.-ஆதி

வாடியமனமிதோ வருந்திநா னழைத்தும் நீ
வருநாது மென்விணைதானோ. (வா)

தேடியபொருளும்மை கூடியதெனவே
ஓடியேபலவா நாடிட நானும்
நாடிவந்தும் விணைச்சுதே. (வா)

காமனைவாட்டிய கடவுளை எற்றியும்
கண்டுமேபணிந்து தனித்தருகியுமே
கருணையினம் வரக்காணேனே. (வா)

பல பல நோன்புகள் பாவைநா னேற்றியும்
பரமனைக்கோரி வரமீயவென்றதும்
பட்சபாதமாய்க் காணுதே. (வா)

அ-வ.—ஆ ஆ! பொருக்கக்கூடவில்லையே கட்டியனும் வரக்கா ணேனே விதியே. பச்-வ.—பச்சைக் குத்தலையோ அம்மே பச்சைகா ருபச்சை, நீருபச்சை, கணவர்பச்சை, குணவர்பச்சை குத்தலையோ அம்மைவங்கிப்பச்சை, சங்குப்பச்சை வாளைப்பச்சைதேளுப்பச்சை, குத்தலையோ அம்மே சவுக்குப்பச்சை, சாமிப்பச்சை, சவிக்கைப்பச்சி, ரங்குப்பச்சை, குத்தலையே அம்மே. பச்-வ.—எசாமி கூவினதார் அ-வ



இப்படியா மாதே உன் கையைத்தொட்டபோதே மனம்கலங்கியதே காமினி இம்மாதிரியாய்க் குத்துவாய். பச்-ப.—நல்லது சாமி.

---

பச்சைக்காரி கண்ணிகள்.

இராகம்-பரசு-ஏகதாளம்.

ஸ்திரீசங்காதருக்கு தேடியபெண்ணுறும் அந்த
சீதாதேவிக்குவந்த சிறுமைகளைக் கேளாய்.

பார்க்கின்றநாலேயிலே பத்துதலையரக்கன்-சிறை
பத்தினியை அவனுக்கு பலித்ததையும் கேளாய்

ரகுராமர்தம்பியோடு சண்டைகளமே செய்து-அந்த
ராவணனை குடும்பத்துடன் கொன்றதையே கேளாய்

பெண்ணைச் சிறையிட்டவர்க்கு பெருபழிகள்சூழும்-இந்த
பெண்தமொழிகட்பாது பெருமுருகனைக்கேளாய்

அ-வ.—இன்னம் எவ்வோரம் செல்லும் (பச்சைக்காரி வசனம்) இதோ ஆயிவிட்டது சுவாமி. அ-வ.—மாதே இன்னம் நடையா பத-வ.—என்னுடைய வந்தவர்களை அப்புறம் இருக்கச்செய்து வருகி ன்றேன். அ-வ.—சீக்கிரம் வருவாய் அடி தோழிகளே என் படுக் கைவீட்டை உன்னதமாய்ச் சிங்காரிப்பீர்கள். தோ-வ.—நல்லது சுவாமி. ப-வ.—இதோ உமது இஷ்டப்படி நடந்துக்கொள்ள வந் தேன் பிராணநாதா. அ-வ.—வருவாய் நாம் அந்தப்புரம் போவோ மடி கண்ணே. பத-வ.—நான் போய்வருகின்றேன் பிரா ணநாதா, அர-வ.—இன்னும் என்னுடன் இருப்பாயா. ப-வ.—நல் லது பிராணநாதா அ-வ.—மாதே இனிஎப்போது உன்னைக் காண்பேதோ. பத-வ.—பிராணநாதா சுடியசீக்கிரத்தில் தங்களிடமேவந்துவிடுகின் றேன். அ-வ.—இது உண்மைதானா. ப-வ.—மும்மூர்த்திகளறிய சூரிய சந்திராதிகளறிய என் மாதாபிதாக்களறிய தங்கள் திருவடி களறிய நான் உமக்கே பெண்டன்றி வேறில்லை நானிந்தவுடல் வெ

டுத்தமுதல்வித்வைவரிலும் உயர்மைக்குக்கருதோனின்றி வெறொன்ல இரு சிவபெருமான் பாதமறிய உண்மையே. போய்வருகின்றேன் தாதா. அ-வ.—நல்லதடி கனிரசமே.

ப-வ.—அடி தோழி என் கோகிக்கை சடைந்தியது இனி கடவுளரு ளிருக்கவேண்டுமடி. தோ-வ.—இவ்வளவு முடித்தவர் அதுவும் முடிப்பாரம்மணி. ப-வ.—அடி பாங்கி எனக்கு பூரண கெர்ப்பமானதால் இன்றேதோ உடலெல்லாம் நோகின்றதடி. இடுப்பையும் கத்தரிக்கின்றது. தோ-வ.—தாயே இதோ மருத்துவமாதை அழைத்துவந்தேன். ம-வ.— சற்று நிதானிப்பாய் அம்மா. இதோ பார் திவ்விய ஆண் குழந்தை பிறந்தான். ப-வ.—அடி தோழி என் னருமை மணியை சாக்கிரதையாய்ப் பாதுகாப்பாயடி. ச-வ.—அம்மணி திரேகம் சவுக்கியந்தானு. ப-வ.—பிதாவே சுகமே. தங்கள் பேரனுக்கு விசுவாமித்திரரால் சகல கல்வியும் ஜாலங்களும் வில்வித்தை முதலானதையும் கற்பிக்கவேண்டியது தந்தையே. ச-வ.—நல்லதம்மா. ப-வ.—மகனே வீரகாந்தா சிக்கிரம்வித்தைகளை உணர்வாயப்பா. வீ-வ.—நல்லதம்மணி.

அ-வ—அடா சேர்வையே நான் அன்று காவலிலிட்ட காரியாகி யபத்மாவதி எப்படி யிருக்கின்றாள். சே-வ.—சுவாமி அன்று முதல் மனைவிட்டின்றுபரியந்திரம் வெளிவாராமலும் ஒருவருடன் வசனியாமலும் யிருக்கின்றார்கள். அ-வ.—சரிதான். ம-வ.—அரசே தாங்களிப்படி யிருந்தால் பின்னுக்கு அரசைத் தாங்குபவரார் அபுத்திரனுக்கு கெதியுமில்லை பத்மாவதியம்மன் கெர்ப்பமோங்கக் கருணைசெய்யப் போகாதா தாதா. அ-வ.—மந்திரி நீ எல்லாமறிந்தும் இப்படிப் பேசலாகுமோ. ம-வ.—அப்படிக்கின்னம் தங்கள் கருத்திருக்கின் இராஜாக்கள் ஐந்து விவாகம் செய்யலாமென மநு உரைப்பதால் தாங்களின்னமொரு விவாகம் செய்துக்கொண்டு புத்திரபாக்கியம் அடையவேண்டும் தாதா. அ-வ.—அப்படியே செய்கின்றேன் அப்பா. வீ-வ.—போற்றி போற்றி அம்மணி. என் தந்தையை நான் காணவேண்டும் எங்கிருக்கின்றார் அம்மா. ப-வ.—பாலகா உன் தந்தையை விராணத்தரசன் சிறைபிடித்து அந்தமான்றீவிற் கனுப்பியிருக்



கின்றார் மகனே. வீ-வ.—அப்படியா அம்மணி நான் இப்பொழுதே சென்றுவிக்கிரோசன்படைகளை நாசம்செய்து அவனைச்சிறைக்குள்ளாக்கி தங்கள் முன் கொண்டு வருகின்றேன் தாயே. ப-வ.—சந்தோஷம் போய் வருவாயடா மகனே. வீ-வ.—போற்றி போற்றி என் தாதா. ச-வ.—(?) என்னுடன் சில ராணுவங்களை அனுப்பினால் நான் விக்ரோசனன் பேரில் போருக்கு போகின்றேன். ச-வ.—சந்தோஷமடா கண்மணியே. அ-வ.—மந்திரி இதென்ன கமது நாட்டில் ரண பேரிகை அடிப்பதாய்க்கேழ்க்கின்றது சீக்கிரம் பாளையங்களைச் சித்தம் செய்விப்பாய் அடே ஆரடா அவன். வந்தேன் வந்தேன்.

---

விக்கிரேசன் கண்ணி.

நவரோஜதிசாம் ஏகதாளம்.

நீயோவென்றே டெதிர்த்து யுத்தம்
நிற்பவன் நீ பாலனே.
நிமையிலாவி எமபுரத்தே
நிர்க்கச்செய்வேன் போ போ

வீரகாந்தன்.

வாயாலாடி களிக்கவேண்டாம்
வணங்கிப்பணிவாய் காலையே
வாரிஅம்பை தாக்கினேன்பார்
வாட்டுவன்படை சீ சீ.

விக்கி.

நாயே உன்னை இருதுண்டாக
நறுக்குவேண்டா வாளால்
நயந்துசப்பு மீய்ந்துசெல்வாய்
நன்மைகாண் போ போ.

வீரகா.

பேயெங்கும் பிணங்கள்மலை
பெருக்கசெய்தேன் பாரிதோ
பிடித்துஉன்னை சிறையிலிட்டு
பேணச்செய்வேன் சீ சீ

அ-வ—இனி நாம் என்னசெய்வோம் பாளையங்களெல்லாம் மடிந்துவிட்டதே நாம் தனியானோம் பார்த்தையா நமக்கிந்த பாலனால் வந்தகெதி. வீ-வ.—சேனுதிபதியே அந்த அரசனைசிறைக்குள்ளாக்கி என் தாயார்முன் கொண்டுவருவீர்கள். சே-வ—அப்படியே வாருமவிக்கிரோசனனே இந்த காவல் மீறிப் போகப்போகாது. அ-வ.—நல்லதுசுவாமி.

---

அரசன் கன்னிகள்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

விதிவசமோ இது வறியேன் — வினையின் கூற்றோ காணேன்
இச்சிறுவன் கையிற் சிக்கி — வெம்பிடவுமானேன்

பாலன் கையாலெய்த அம்பால் — படைகளெல்லாம்சாக
பாவமென்ன முன் செய்தேனோ — பரனே உளம்நோக

உலகோரென்னை வசையாடிட — உற்றதையோ விதியோ
உதவிசெய்வருண்டோயிங்கு — உனையேன் வந்தகெதியே

சிலமேலிந்த அபவாதமா — நிந்தைகொள்ள நானே
கினையாதென்றோ செய்தபழி — கெதியோ இதுதானே

என்னசெய்ய இந்தப்பாலன் — என்றுவாறோகாணேன்
சகாவிஸ்வேசா மனம் — இறங்கும் வேறுதோணேன்

வீ-வ.—தாயே இதோ விராணத்தரசனை சிறையாக்கிக்கொண்டுவந்தேன் அம்மணி. ப-வ.—எங்கேபாலா. வீ-வ.—இதோதாயே. ப-வ.—பார்ப்பேன். அ-வ.—போற்றி போற்றி மகாராணியே என்துன்பத்தைப் போக்காயா. ப-வ,...அரசே ஆணும் பெண்ணும்பந்தையமிட்டால் யார் கெலிப்பார் யார் தோற்பார். நீர்என்னை சிங்காரவனத்திற்கண்டு காந்தருவமாய் புணரவென அன்று மறுக்க நாமிருவரும் இட்ட பந்தையம் முடிந்தது. அ-வ.—உன்னை அருஞ் சிறையிலிட்டேனே. ப-வ.—நீர் கூத்தாடிய குறத்தியைகூடியதுண்டா அ-வ.—உண்டு. ப-வ.—இந்த முச்சலிக்கை யார்கையெழுத்து. அ-வ. எனதே. ப-வ.—இந்தப்பச்சையோ. அ-வ.—நான் குற்றஞ்செய்தேதே. அடி மாதரசே உன் புத்திக்கு நான் மெச்சினேன். ப-வ.—வெளியேவாரும் பாதம் பணிந்தேன்பத்தாவே. அ-வ.—வாழியடிமாதே. ப-வ.—அப்பா வீரகாந்தா இவர்தான் உன்தந்தை. வீ-வ.—போற்றி போற்றி என் பிதாவே போற்றி. அ-வ.—வாழி வாழி மைந்தா என்னை அபுத்திரனெனும்வசை நீங்கியது. இனி தேசம் போவோம்.

---

## கதாசாரம்.

பத்மாவதி விக்கிரமசமகாராஜனை பாணிக்கிரகணஞ் செய்துக்கொள்ளாமுன்னம் கடிந்துரைத்தவளா யிருந்தும் தன்னை அவர் மணந்து நாலிட்ட சபதத்தின்படி சிறையிலிருக்கச்செய்தும் தன்னிலை மாறாமலும் தன் தந்தையால் தன் கணவனுக்கு ஒரு துன்பமும் நேரிடாமல் தான் வாசித்து அறிவை யடைந்தவளாதலால் தான் சொன்னவாக்கின்படி தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய முயன்ற காரியத்தில் தான் பிறந்த இடத்தாருக்கும் புகுந்த இடத்தாருக்கும் பகை விளையாமல் பாதுகாத்து தன் கணவனுக்கினையின்படித் துயரருந்தி கற்பிற்கழிவு சம்பவியாமல் தன்மீது வெறுப்பாயிருந்த கணவனைத் தன் வசப்படுத்திக்கொண்டனள். ஆதலால் பெண்ணாய்ப்பிறந்தவாள் எல்லோரும் இக்கதையைக் கவனித்து கணவனைத் தன்மீது வருத்தங்கொண் டிருக்கினும் நயத்மொழிகளால் வசப்படுத்தி வணங்கிவாழ்வதே வண்மையின்றி தன் தாய்தந்தையரிடம் கணவன்பேரில் தூறுபேசி கலகஞ்செய்து தானுங் கனக்குறையடைவது மாதர்கட் கழகலவென்று இக்கதையினால் சுட்டிக்காட்டப்பட்டதெனவறிக.

அப்பாவுபிள்ளை.